**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 495** **நாள்: 21.09.2026**

**தண்டையார்பேட்டை மண்டலம், ஐ.ஓ.சி. எண்ணூர் நெடுஞ்சாலையில் ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய பேருந்து நிலையத்தை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.ஆ.விஜய் தமிழன் பார்த்திபன் அவர்கள், மாண்புமிகு நிதி, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை அமைச்சர் முனைவர் நெ. மரியவில்சன் ஆகியோர் இன்று பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தனர்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.ஆ.விஜய் தமிழன் பார்த்திபன் அவர்கள் மற்றும் மாண்புமிகு நிதி, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை அமைச்சர் முனைவர் நெ. மரியவில்சன் ஆகியோர் பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு-38க்குட்பட்ட ஐ.ஓ.சி. எண்ணூர் நெடுஞ்சாலையில் இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி மற்றும் மூலதன நிதியின் கீழ், ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் 16,000 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்ட புதிய பேருந்து நிலையத்தை இன்று (21.09.2026) பயன்பாட்டிற்குத் திறந்து வைத்து, பேருந்துகள் இயக்கத்தை கொடியசைத்துத் தொடங்கி வைத்தனர்.

இப்பேருந்து நிலையத்தில், குழந்தைகளுக்கு தாய்மார்கள் பாலூட்டும் அறை, காத்திருப்போர் அறை, பேருந்து நேரக்காப்பாளர் அறை, ஆண்கள்/ பெண்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் கழிவறை உள்ளிட்ட கட்டமைப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

மேலும், இப்பேருந்து நிலையத்திலிருந்து 12 பேருந்துகள் மூலம் 122 புறப்பாடுகள் இயக்கப்படுகிறது. இப்பேருந்துகள் காலை முதல் இரவு கடைசி பேருந்து வரை இயக்கப்படும் நேர அட்டவணை அமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் இப்பகுதியில் வசிக்கும் 18,000க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பயன் பெறுவார்கள்.

இந்நிகழ்வில், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் டாக்டர் ஜி.எஸ். சமீரன், இ.ஆ.ப., மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் முனைவர் வீ.ப. ஜெயசீலன், வடக்கு வட்டார துணை ஆணையர் திருமதி ஸ்வேதா சுமன், இ.ஆ.ப., தண்டையார்பேட்டை மண்டல அலுவலர் திரு.ஏ.ராஜ்குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**